"இனிமையான குழந்தைகளே! ஆத்மா மற்றும் பரமாத்மா பற்றிய யதார்த்த ஞானம் உங்களிடம் உள்ளது. அதனால் நீங்கள் அறைகூவல் விடுக்க வேண்டும். நீங்கள் சிவசக்திகள் என்று.

கேள்வி: அனைத்தையும் விட உயர்ந்த குறிக்கோள் எது? அதற்காகவே நீங்கள் புருஷார்த்தம் செய்கிறீர்கள்?

பதில்: நிரந்தர நினைவில் இருப்பது... இதுவே அனைத்திலும் உயர்ந்த குறிக்கோள் ஆகும். நினைவின் மூலம் தான் கர்மபோகம் முடிவுற்று கர்மாதீத் நிலை .ஏற்படும். எந்தத் தாய்-தந்தை யிடம் அளவற்ற சுகம் கிடைக்கின்றதோ, அவரிடம் - பாபா உங்கள் நினைவு மறந்து போகின்றது என்று குழந்தைகள் சொல்கின்றனர்- அதிசயம் இல்லையா? ஆத்ம அபிமானியாக இருப்பதற்கான புருஷார்த்தம் நடந்து கொண்டே இருக்குமானால் நினைவு மறந்து போகாது.

பாடல்: யார் இந்த விளையாட்டையெல்லாம் உருவாக்கியது?....

ஓம் சாந்தி. பகவான் வாக்கு - குழந்தைகள் தங்களின் தந்தையாகிய பகவானைப் பற்றி அறிந்திருக்கிறார்கள். இப்போது குழந்தைகள் வந்து தந்தை மூலம் ஆஸ்திகர் ஆகியிருக்கின்றனர். ஏனெனில் தந்தையின் மூலம் தந்தையை அறிந்து கொண்டார்கள். அதனால் ஆஸ்திகர் என அழைக்கப்படுகின்றனர். நீங்கள் அறிந்து கொண்டிருக்கிறீர்கள், நிச்சயமாக நாம் ஆத்மாக்கள் தான். அவர் ஆத்மாக்களாகிய நம்முடைய தந்தை. மனிதர்களில் ஒருசிலர் தன்னை ஆத்மா என உணர்ந்திருக்கலாம், ஆனால் பரமாத்மாவை யாருமே அறிய மாட்டார்கள். எப்போது தந்தை தாமே வந்து குழந்தைகளுக்குப் பிறவி கொடுக்கிறாரோ மற்றும் அவர்களுக்குத் தம்மைப் பற்றிய அறிமுகத்தைக் கொடுக்கின்றாரோ அப்போது தான் அறிந்து கொள்ள முடியும். தந்தை தாமே வந்து தான் தமது அறிமுகத்தைக் கொடுக்க வேண்டியுள்ளது. அவர் ஆத்மாக்களின் தந்தை. முன்னால் வந்து சொல்கிறார், நீங்கள் ஆத்மாக்கள், நான் ஆத்மாக்களாகிய உங்களுடைய பரமபிதா. நீங்கள் நிச்சயம் செய்கிறீர்கள். இதுவோ பொதுவான விஷயம். ஆத்மாக்களின் தந்தை நிச்சயமாக இருக்கின்றார். ஆத்மாவும் பரமாத்மாவும் வெகுகாலம் பிரிந்து விட்டனர் என்று பாடலும் உள்ளது. தந்தையைக் குழந்தைகளே அறிவார்கள். தந்தை 5000 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வந்திருக்கிறார். எப்போது குழந்தைகள் அனைவரும் நாஸ்திகர்களாக, துக்கம் நிறைந்தவர்களாக ஆகிவிடுகிறார்களோ, ஒரு ஆஸ்திகர் கூட இல்லையோ, அப்போது தந்தை வருகின்றார். ஆஸ்தி கராக ஆக்கிவிட்டுப் பிறகு மறைந்து விடுகின்றார். பிறகு யாருமே தந்தையை அறிய மாட்டார்கள். இப்போது குழந்தைகளாகிய உங்களிலும் வரிசைப்படி முயற்சியை அனுசரித்து நிச்சயம் உள்ளது. அனைவருக்கும் முழு நிச்சயம் இல்லை. இங்கே முன்னால் அமர்ந்திருக்கலாம், பரமபிதா பரமாத்மா, பதீதபாவன். தந்தை பதீதத்திலிருந்து பாவன தேவதை ஆக்கிக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்திருக்கிறார்கள். தேவதைகளுக்கோ இங்கே மூர்த்திகள் மட்டுமே உள்ளன. அவர்களோ இங்கே இல்லை. பிராமணர்களாகிய உங்களைத் தவிர மனிதர்கள் ஒருவருமே ஆத்மா, பரமாத்மா பற்றி அறிய மாட்டார்கள். நானே பரமாத்மா எனச் சொல்வதன் மூலம் ஆத்மாவையும் அறிந்து கொள்வதில்லை, பரமாத்மாவையும் அறிந்து கொள்வதில்லை. குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள், தன்னை யதார்த்த

ரீதியாக ஆத்மா என உணர்ந்து, பரமாத்மாவைத் தன்னுடைய தந்தை எனப் புரிந்து கொண்ட மனிதர் யாருமே இல்லை. ஆனால் இப்போது இந்த கூக்குரலை யார் விடுப்பார்கள்? சக்திகள் தாம் அறை கூவல் விடுத்தார்கள். ஆனால் இதுவரை கூட உங்களிடம் வரவேண்டிய அந்த சக்தி வரவில்லை. சிவசக்திகளோ பெயரும் புகழும் பெற்றவர்கள். ஜகத் அம்பாவும் சக்தி தான். இப்போது மாநாடுகளில் தர்மங்களின் தலைவர்கள் வருகின்றனர், அவர்களுக்கும் சொல்லிப் புரிய வைக்க வேண்டும்.

பாபா சொல்கின்றார் - குழந்தைகளே! நீங்களோ தேகி அபிமானி ஆகவேண்டும். நாம் ஆத்மா, பரமபிதா பரமாத்மாவிடமிருந்து ஆஸ்தி அடைந்து கொண்டிருக்கிறோம்--இந்த நிச்சயம் இல்லை, எந்த ஒரு சந்தேகம் இருந்தாலும் உயர்ந்த பதவி அடைய இயலாது. நல்ல-நல்ல குழந்தைகளும் கூட போகப் போக மாயாவின் புயல் வருவதால் கீழே விழுந்து விடுகின்றனர். நிச்சயபுத்தி யிலிருந்து சந்தேக புத்தியுள்ளவர்களாக ஆகிவிடுகின்றனர். இல்லையென்றால் இவர் நம்முடைய தந்தை இல்லை என்று குழந்தைகள் ஒருபோதும் சந்தேக புத்தி உள்ளவர்களாக ஆக மாட்டார்கள். இங்கே இது ஒரு அதிசயம். பரமபிதா பரமாத்மா நம் அனை வருக்கும் தந்தை, அவர் நமக்குக் கற்றுத் தருகின்றார் என்று சொல்லவும் செய்கிறார்கள். பிறகும் கூடத் தந்தையை மறந்து விடுகின்றனர். தினந்தோறும் சொல்லிப் புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார் -- குழந்தை களே, உங்களுடைய தந்தையை நினைவு செய்வீர்களானால் உங்களுடைய விகர்மங்கள் வினாசமாகும். விகர்மங் களோ அநேக பிறவிகளுக்கானது தலை மீது உள்ளன. நீங்கள் அறிவீர்கள், மம்மா, பாபா - பிரம்மா, சரஸ்வதி என்று யாரைச் சொல்கிறீர்களோ அவர்கள் நம்பர் ஒன்றில் இருக்கிறார்கள். அவர்களும் தாங்களே சொல்கிறார்கள் -- இவ்வளவு யோகம் செய்கிறோம், முயற்சி செய்கிறோம், இருந்தாலும் அநேக பிறவிகளின் பாவங்கள் நீங்கிய பாடில்லை. ஏதேனும் கொஞ்சமாவது முந்தைய தீவினைகளின் விளைவுகளை அனுபவித்தாக வேண்டியுள்ளது. கடைசியில் இந்தக் கர்ம வினைகளின் அனுபவத்திலிருந்து விடுபட்டுக் கர்மாதீத் நிலையை அடைய வேண்டும். முயற்சி செய்ய வேண்டும். மாயாவும் கூட பலவீனமான போர்வீரன் அல்ல. இருவருமே சர்வ சக்திவான்கள். இராவணன் மாயா மனிதர்கள் அனைவரையுமே தூய்மையற்றவர்களாக ஆக்கி விட்டிருக்கிறான். பதீதபாவனா எனப் பாடவும் செய்கிறார்கள், தாளம் போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஆக, நிச்சயமாக பதீத்தாகத் தான் இருக்கிறார்கள் இல்லையா? ஆனால் தாங்கள் பதீத (தூய்மையற்றவர்கள்) என்பதை அவர்கள் புரிந்து கொள்வ தில்லை. இப்போது இது பதீத உலகம் என்பதைப் புரிய வைக்க வேண்டியதும் அவசியம். பாவன உலகம் (தூய்மையான உலகம்) என்று சத்யுகத்திற்குத் தான் சொல்லப் படுகின்றது. பாவன உலகத்தில் இதுபோல் பதீதபாவனரை அழைக்க மாட்டார்கள். அங்கோ பாரதம் மிகுந்த சுகம் நிறைந்ததாக இருந்தது, ஒரு தர்மம் மட்டுமே இருந்தது. இப்போது நீங்கள் அறிவீர்கள், பரமபிதா பரமாத்மா ஞானக்கடல். அவர் இந்த அனைத்து வேத சாஸ்திரங்கள் முதலியவற்றின் இரகசியத்தை அறிவார். அவர் தான் கற்பித்துக் கொண்டிருக் கிறார். ஆனால் சிலர் இதுபோல் இருக்கிறார்கள்- அதாவது பரமாத்மா நமக்குக் கற்பிக்கின்றார் என்பதைக்கூட மறந்து விடுகிறார்கள்:. எல்லையற்ற தந்தை நமக்குக் கற்பிக்கின்றார் என்ற அந்த போதை ஏறுவதில்லை. இங்கிருந்து வெளியே வீட்டுக்குப் போனதும் எல்லாம் உடைந்து நொறுங்கிப் போகின்றது. யுக்தியுடன்

முயற்சி செய்பவர்கள் அபூர்வமே! மாயா மிகவும் சக்தி வாய்ந்தது. தேக அபிமானம் தான் முதல் நம்பர். பாபா சொல்லிப் புரிய வைத்திருக்கிறார், தன்னை ஆத்மா என உணருங்கள். நாம் ஆத்மா, இந்த சரீரத்தின் மூலம் நாம் காரியம் செய்கின்றோம். தன்னைப் பரமாத்மா என்று ஒருபோதும் நினைத்துக் கொள்ளக் கூடாது. பாபா சொல்கிறார், உங்களைப் பதீதத்திலிருந்து பாவனமாக ஆக்குவதற்காக வந்திருக்கிறேன். என்னை ஒவ்வொரு கணமும் நினைவு செய்யுங்கள். ஆனால் நல்ல-நல்ல குழந்தைகளும் கூட பாபாவை நினைவு செய்வ தில்லை. பிறகு உண்மையையும் சொல்வதில்லை. எழுதியனுப்பும் சார்ட்டிலும் பொய்யாக உள்ளது. உண்மையான சார்ட் எழுதுவதில்லை. பாபா சொல்லிப் புரியவைக்கிறார், தன்னை ஆத்மா என உணருங்கள். நான் ஆத்மா 84 பிறவிகளை முடித்து விட்டு இப்போது பாபாவிடம் செல்கின்றேன். அதிகாலை எழுந்து பாபாவை நினைவு செய்வீர்களானால் அதனுடைய போதை நாள் முழுவதும் இருக்கும். மனிதர்கள் பணம் சம்பாதித்தால் அதன் போதை இருக்கின்றது இல்லையா, இன்று இவ்வளவு சம்பாதித்து விட்டோம் என்று! இதுவும் கூடத் தொழில், வியாபாரம் தான் என்றால் அதில் எவ்வளவு முயற்சி செய்ய வேண்டும் - எவ்வளவு முயற்சி செய்கிறார் என்பதை பாபா (பிரம்மா) தம்முடைய அனுபவம் சொல்கிறார்- அதிகாலை எழுந்து தனக்குத் தான் ஞான விஷயங்களைப் பேசிக் கொள்ள வேண்டும். இப்போது நாடகத்தில் நமது பாகம் முடிவடைந்து விட்டது. இப்போது நாம் இதோ போய் விட்டோம்! பிறகு 21 பிறவிகள் இராஜ்யம் செய்ய வேண்டும். எவ்வளவு இனிமையான, எவ்வளவு அற்புதமான பாபா! அப்படிப்பட்ட தந்தையை எந்த ஒரு மனிதரும் அறிந்திருக்கவில்லை. தந்தை வந்து குழந்தைகளைத் தன்னைக் காட்டிலும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்கின்றார். பிறகு குழந்தைகள் தந்தையை சர்வ வியாபி எனச் சொல்லித் தங்களைக் காட்டிலும் கீழே கொண்டு சென்று விடுகின்றனர். அதனால் பாபா சொல்கிறார், நீங்கள் மிகுந்த துக்கத்தில் வந்து விட்டிருக்கிறீர்கள். நான் குழந்தைகளாகிய உங்களை பிரம்மாண்டம் மற்றும் உலகம் இரண்டுக்குமே எஜமானர் ஆக்குகின்றேன். பிறகு குழந்தைகளாகிய நீங்கள் தந்தையாகிய என்னை சர்வவியாபி எனச் சொல்லி விடுகின்றீர்கள். இதுவும் டிராமாவில் ஒரு விளையாட்டு. இப்போது பாபா வழிகாட்டுகின்றார், இப்படி-இப்படிச் சொல்லிப் புரிய வையுங்கள்.

இலட்சுமி-நாராயணர் போன்ற தேவி-தேவதைகள் நூற்றுக்கு நூறு சக்திசாலியான புத்தி உள்ளவர்களாக இருந்தார்கள். வித்தியாசம் பாருங்கள் எவ்வளவு இருக்கிறது என்று இப்போது அப்படி இல்லை - எங்கே பாரதம் சொர்க்கமாக இருந்த நிலை! இப்போது நரகமாக உள்ளது. இந்த ஞானம் எந்த ஒரு மனிதரிடமும் இல்லை. குழந்தைகளாகிய உங்களிடமும் அந்த சக்தி இல்லை. தேக அபிமானம் அதிகம் உள்ளது. ஆத்ம அபிமானி ஆவதற்கு தாரணை இருக்க வேண்டும். பாபா கட்டளையிடு கின்றார்--இப்படி-இப்படி அறைகூவல் விடுங்கள். ஆத்மா என்பதென்ன?, பரமாத்மா என்பவர் யார்? என்பதெல்லாம் யாருக்குமே தெரியாது. நாம் ஆத்மா புள்ளியாக உள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் ஞானம் நிறைந்தவர், பதீதபாவன். பிறப்பு-இறப்பில் அவர் வருவதில்லை. ஆத்மாக்களாகிய நாம் பிறப்பு-இறப்பில் வருகின்றோம். பரமபிதா பரமாத்மா சொல்கிறார், எனக்கும் இந்நாடகத்தில் பங்கு உள்ளது. நான் வருகின்றேன். உங்களனைவரையும் சுகமானவர்களாக ஆக்கிவிட்ட பிறகு நிர்வாண் தாமத்தில் (சப்தத்திற்கு அப்பாற்பட்ட அமைதி

உலகில்) அமர்ந்து விடுகின்றேன். மனிதர்கள் வயதாகி விட்டால் வானப்ரஸ்தத்தில் போய்விடுகின்றனர். ஆனால் அதனுடைய அர்த்தத்தைப் புரிந்து கொள்ள வில்லை. வானப்ரஸ்தம் என்றால் சப்தத்திற்கு அப்பாற்பட்ட இருப்பிடம். அவர்கள் சப்தத்திற்கு அப்பாற்பட்டு இருப்ப தில்லை. இப்போது அனைவருமே வானப்ரஸ்திகள் தான். ஆத்மாக்களாகிய நாம் அனைவரும் சப்தத்திற்கு அப்பாற்பட்ட உலகில் வசிப்பவர்கள். ஆனால் அந்த இருப்பிடத்தையும் கூட அறிந்து கொள்ளவில்லை. உங்களிலும் கூட யாராவது சிலருடைய புத்தியில் தான் இந்த விஷயங்கள் உள்ளன. தேக அபிமானம் அதிகமாக உள்ளது. தந்தையைப் பின்பற்றுவதில்லை. மாயாவும் மிகவும் சக்தி வாய்ந்ததாக உள்ளது. ஆத்மா மற்றும் பரமாத்மாவிற்கிடையிலான சம்பந்தத்தை யாருமே அறிந்திருக்க வில்லை தந்தையின் சம்பந்தத்தையே அவர்கள் அறியவில்லை. நீங்களும் கூட அடிக்கடி மறந்து விடுகின்றீர்கள். தந்தை யினுடையவர்களாக ஆகிவிட்டு, தந்தையை முழுமையாக நினைவு செய்ய வேண்டும் இல்லையா? சொல்கிறார்கள் -- பாபா, நினைவு அடிக்கடி மறந்து போகின்றது. அட!, நீங்கள் தாய்-தந்தையை நினைக்க மறந்து விடுகிறீர்களா! நிரந்தரமாக நினைவு செய்ய வேண்டும் என்பது தான் குறிக்கோள். எந்தத் தாய்-தந்தையிடமிருந்து சொர்க்கத்தின் ஆஸ்தியை அடைந்து கொண்டிருக் கிறீர்களோ, அவரை நீங்கள் மறந்து விடுகிறீர் கள்! அதிசயம்! தாய்-தந்தையோ ஒருவர் தான். பாபா சொல்கிறார், நானே உங்களுடைய தாய்-தந்தையாக இருக்கிறேன். இவை மிகவும் ஆழமான விஷயங்கள். பலர் ஜகதம்பா மாதா என்று நினைக்கிறார்கள், ஆனால் அப்படியில்லை-அவரோ சாகாரி இல்லையா? நீங்கள் தாய்-தந்தை எனப்பாடுவது நிராகாருக்குத்தான். இந்த விஷயங்கள் அனைத்தையும் முதலில் சொல்ல வில்லை. நாளுக்கு நாள் மிக ஆழமான, நுண்ணிய விஷயங்கள் சொல்லப்படுகின்றன. எந்த ஒரு விஷயத்தையும் புரிய வைக்க முடியவில்லை என்றால் பாபா இது பற்றி இன்னும் சொல்லவில்லை, பாபாவிடம் கேட்கிறோம் என்று சொல்லுங்கள். நாளுக்கு நாள் புதுப்புதுப் பாயின்ட்டுகள் (கருத்துக்கள்) கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. ஞானமோ மிகப் பெரியது. புரிந்து கொள்ளக் கூடியவர்கள் யாராவது புரிந்து கொள்வார்கள். படித்துப் படித்துக் களைத்துப் போகின்றனர். பாபாவுக்கு எழுதுகின்றனர் -- என்னால் இதற்கு மேல் போக முடியவில்லை, சோர்ந்து விட்டேன். சோர்ந்து போய்ப் படிப்பை விட்டுவிடுகின்றனர். விகாரத்தில் போய் விட்டால் படிப்பு விட்டுப் போகின்றது. இந்தப் படிப்பு பிரம்மச்சரியத்தின் தாரணையினால் தான் ஆகும். பிரம்மச்சரியத்தை விட்டு விட்டால் தாரணை ஆகாது. காமம் மகா சத்ரு என்று மற்றவர்களுக்குச் சொல்ல முடியாது. புத்தியின் பூட்டு பூட்டப் பட்டுவிடும். குறிக்கோள் மிகவும் உயர்ந்தது.

சந்நியாசிகளோ இல்லற தர்மத்தை விட்டு ஓடிப் போய் விடுகின்றனர். அவர்கள் ஹடயோகி சந்நியாசிகள், இது இராஜயோகம். பாபா தான் வந்து இராஜயோகம் கற்பிக்கிறார். ஹடயோகி ஒருபோதும் இராஜயோகம் கற்பிக்க முடியாது. இவ்விஷயத்தை முழுமையாகச் சொல்லிப் புரிய வைப்பதற்கான வழிவகை வரவில்லை. அவர்களுடையது ஹடயோக சந்நியாசம். அவர்களால் பதீதத்தைப் பாவனமாக ஆக்க முடியாது. உங்களுடையது எல்லையற்ற சந்நியாசம். அது எல்லைக்குட்பட்ட சந்நியாசம். உங்களுடைய புத்தியில் உள்ளது- அதாவது நம்முடைய 84 பிறவிகள் முடிவடைந்து விட்டன. இப்போது

நாம் திரும்பிச் செல்கின்றோம். இந்த எல்லையற்ற சந்நியாசம் புத்தியினால் செய்யப் படுவதாகும். அவர்களுடையது ஹடயோக சந்நியாசம். உங்களுடையது இராஜயோகம், கர்மயோகம். இதை பகவான் கற்றுத் தருகின்றார். இப்போது நீங்கள் நல்லபடியாக சொல்லிப் புரிய வைக்க முடியும் -- அது ஹடயோகம், இது இராஜயோகம். சிவனைப் பற்றியும் யாரும் அறிந்திருக்கவில்லை. எப்படி ஆத்மா புள்ளியாக உள்ளதோ அதுபோல் சிவனும் புள்ளியாக உள்ளார். புள்ளியின் அடையாளமும் நெற்றி மீது இடப்படு கின்றது, வேறு எந்த இடத்திலும் பிந்தி (திலகம்) இட மாட்டார்கள். நெற்றியில் தான் திலகம் இடப்படு கின்றது. ஆத்மாவும் இங்கே தான் இருக்கின்றது. இது யாருக்கும் தெரியாது. இவ்வளவு சிறிய புள்ளியில் 84 பிறவிகளின் அழியாத பாகம் அடங்கியுள்ளது. இவை எவ்வளவு ஆழமான விஷயங்கள்! யாருக்கும் இதைச் சொல்லிப் புரிய வைக்க வராது. உண்மையில் சொல்ல வேண்டும். எப்படி ஆத்மா புள்ளியாக உள்ளது, அதுபோலவே பரமாத்மாவும் புள்ளியாக உள்ளார். வேறோர் ஆத்மா வருமானால் அதுவும் பக்கத்தில் அமரும் இல்லையா? பிராமணருக்குள் ஆத்மாவை அழைக்கின்றனர். ஆத்மா வந்து பேசுகின்றது - நான் இன்ன இடத்தில் பிறவி எடுத்துள்ளேன். அப்படியென்றால் அந்த ஆத்மா எங்கே வந்து அமரும்? தலையிலா? அதில் தன்னுடைய ஆத்மாவும் உள்ளது இல்லையா? பாபா சொல்கிறார், நானும் கூட புள்ளி தான். என்னைப் பரமபிதா பரம ஆத்மா என்கின்றனர். அவருடைய மகிமை மிகப் பெரியது. சிவாய நமஹ. இந்த மகிமை செய்தது யார்? ஆத்மா சாலிகிராம். ஆக, நிச்சயமாக அது தனிப்பட்டது தான். உலகம் இந்த விஷயங்கள் பற்றி அறிந்து கொள்ளவில்லை. நீங்கள் அறிவீர்கள், அவருக்கு ஒரே பெயர் சிவன் என்பதாகும். பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கு பிரம்மா தேவதாய நமஹ, விஷ்ணு தேவதாய நமஹ என்பார்கள். அவருக்கு சிவபரமாத்மாய நமஹ என்பார்கள். ஆகவே சிவன் உயர்ந்தவராகிறார் இல்லையா? இந்த விஷயங்களை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். இந்த ஞானமும் கூட உங்களுக்கு இப்போது தான் உள்ளது. உங்களது இந்தப் பிறவி வைரம் போன்றது. தேவதைகளோ பலனை அனுபவிக்கிறார்கள். இந்த பலனை அளிக்கின்ற தந்தை அற்புதமானவர். அத்தகைய பரலௌகீகத் தந்தைக்கு எவ்வளவு மதிப்பளிக்க வேண்டும்! புத்தியோகத்தை இந்த பிரம்மா மீது அல்ல, அவர் மேல் (சிவபாபா மீது) வைக்க வேண்டும். அந்தத் தந்தை கற்பிக்கின்றார் இவர் மூலம். இந்த சரீரத்தை கடனாக எடுத்துள்ளார். முழு சிருஷ்டியிலும் எவ்வளவு பெரிய விருந்தாளி! சிவபாபா பரந்தாமத்திலிருந்து வருகின்றார். எவ்வளவு பெரிய பாரதத்தின் விருந்தாளி! எங்கிருந்து வந்திருக்கிறார்? அந்த மந்திரி முதலானோர்க்கு எவ்வளவு கௌரவம் உள்ளது! இவர் இரகசிய வேடத்தில் எவ்வளவு பெரிய விருந்தாளி, பதீதத்தைப் பாவனமாக்க வந்திருக்கிறார்! நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. அதிகாலை எழுந்து நினைவில் அமர்ந்து வருமானத்தைச் சம்பாதிக்க வேண்டும். தனக்குத் தான் ஞான விஷயங்களைப் பேசிக் கொள்ள வேண்டும்.

ஆத்ம அபிமானியாக இருக்க வேண்டும்.

2. இராஜயோகம், கர்மயோகத்தைக் கற்றுக் கொண்டு மற்றவர்களுக்கும் கற்பிக்க வேண்டும். ஒரு போதும் களைப்படைந்து படிப்பை விட்டுவிடக் கூடாது. பாபாவுக்கு அவசியம் மதிப்பளிக்க வேண்டும்.

வரதானம் : தந்தைக்கு சமமாக எல்லையற்ற விருத்தி கொண்டிருக்கக்கூடிய மாஸ்டர் விஷ்வ கல்யாணகாரி ஆகுக.

எல்லையற்ற விருத்தி (உள்ளுணர்வு) என்றால் அனைத்து ஆத்மாக்களுக்காகவும் நன்மை நிறைந்த விருத்தி வைப்பது - இது தான் மாஸ்டர் விஷ்வ கல்யாணகாரி ஆகுவது ஆகும். தன்னுடைய மற்றும் தன்னுடைய எல்லைக்குட்பட்ட நிமித்தமாக ஆகியிருக்கும் ஆத்மாக் களுடைய நன்மைக்காக மட்டும் அல்ல, ஆனால், அனைவருக்காகவும் நன்மை நிறைந்த விருத்தி இருக்க வேண்டும். யார் தன்னுடைய முன்னேற்றத்தில், தன்னுடைய பிராப்தியில், தனக்காக திருப்தியுடன் நடக்கக் கூடியவர்களோ, அவர்களே சுயத்திற்கு நன்மை செய்பவர்கள் ஆவார்கள். ஆனால், யார் எல்லையற்ற விருத்தி வைத்து எல்லையற்ற சேவையில் பிஸியாக இருக்கின்றார்களோ, அவர்களைத் தான் பாப்சமான் மாஸ்டர் விஷ்வ கல்யாணகாரி என்று கூறமுடியும்.

சுலோகன்: இகழ் - புகழ், மானம் - அவமானம், நஷ்டம் - இலாபத்தில் சமமாக இருக்கக்கூடியவர்கள் தான் யோக சொரூப ஆத்மா ஆவார்கள்.